# 23-10-2024 செய்தி

## வளர்ச்சி ஏற்றத்தாழ்வுகள் பற்றிய புரிதல்

- சமூக நிறுவனங்கள் எவ்வாறு பொருளாதார வளர்ச்சியையும், நாடுகளின் செழுமையையும் தீர்மானிக்கின்றன என்பது பற்றிய ஆய்வுகளுக்காக டாரன் அசெமோக்லு (Daron Acemoglu), சைமன் ஜான்சன்(Simon Johnson) , ஜேம்ஸ். ஏ.ராபின்சன் (James A Robinson) ஆகியோருக்கு இந்த ஆண்டுக்கான பொருளாதார நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது.
- அசெமோக்லுவும், சைமனும் அமெரிக்காவில் உள்ள மாசசூசெட்ஸ், சைமனும் அமெரிக்காவில் உள்ள மாசசூடெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (MIT) பேராசிரியர்களாகப் பணிபுரிகின்றனர்.
- ராபின்சன் அமெரிக்காவில் உள்ள சிகாகோ பல்கலைக்கழகத்தில் உள்ள சிகாகோ பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராக உள்ளார்.

### ஏற்றத்தாழ்வின் அடிப்படைக் காரணங்கள்

- உலகின் முதல் 20 சதவீதப் பணக்கார நாடுகள், தற்போது ஏழை நாடுகளைவிடச் சுமார் 30 மடங்கு பணக்கார நாடுகளாக உள்ளன. பணக்கார நாடுகளுக்கும் ஏழ்மையான நாடுகளுக்கும் இடையே வருமான இடைவெளி நீடித்துவருகிறது;
- ஏழ்மையான சில நாடுகள் பணக்கார நாடுகளாக மாறினாலும்கூட, முன்னேறிய நாடுகளின் நிலையை இன்னும் அவை எட்டவில்லை. பொருளாதார வளர்ச்சியில் உள்ள வேறுபாடுகளையும், வளர்ச்சி ஏற்றத்தாழ்வுகளையும் நிர்ணயிப்பது என்ன என்பது பேரியல் பொருளாதாரத்தின் (Macro Economics) மையக் கேள்விகளில் ஒன்று.
- ஆதிக்கம் செலுத்தும் பொருளாதார வளர்ச்சியானது இலக்கியம், தொழில்நுட்பம், மனித மூலதனம் அல்லது திறன் மேம்பாடு போன்ற மாறிகளைப் (Variable) பரிந்துரைக்கிறது. இந்த மாறிகள் அனைத்தும் நெருங்கிய காரணங்களாக இருந்தாலும், அடிப்படைக் காரணங்களைத் தேடுவது பேரியல் பொருளாதாரத்தில் மிகத் தீவிரமான ஆராய்ச்சிகளில் ஒன்றாகும்.

### சுரண்டப்பட்ட பூர்விகர்கள்

- பொருளாதாரத்தில் ‘நிறுவனங்கள்’ என்பது அரசியல், பொருளாதாரம், சமூக வாழ்க்கையைக் கட்டமைக்க மனிதர்களால் உருவாக்கப்பட்ட கட்டுப்பாடுகள் என வரையறுக்கப்படுகிறது.
- அவை முறையான விதிகள் (அரசமைப்புகள். சட்டங்கள், சொத்துரிமைகள்), முறைசாராக் கட்டுப்பாடுகள் (சமூக விதிமுறைகள், தடைகள், பழக்கவழக்கங்கள், மரபுகள், நடத்தை விதிமுறைகள்).
- ஐரோப்பியர்கள் உலகின் பெரும் பகுதிகளைக் காலனிமயப்படுத்தியபோது, அன்றைய சமூக, அரசியல் நிறுவனங்களைப் பிராந்தியத்துக்கு ஏற்ப வித்தியாசமாக மாற்றினர்.
- சில காலனிகளில் பூர்விக மக்களைச் சுரண்டுவதும், காலனியாதிகளுக்குப் பயனளிக்கும் வகையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதும் நோக்கங்களாக இருந்தன.
- மற்ற சந்தர்ப்பங்களில், காலனியவாதிகள் ஐரோப்பியக் குடியேறிகளின் நீண்டகால நலனுக்காக அனைத்தையும் உள்ளடக்கிய அரசியல், பொருளாதார அமைப்புகளை உருவாக்கினர்.
- காலனிகளில் நிறுவப்பட்ட நிறுவனங்களின் வகையைப் பாதிக்கும் ஒரு முக்கியமான காரணி, காலனிமயப்படுத்தப்பட வேண்டிய பகுதியின் மக்கள்தொகை அடர்த்தி. பூர்விக மக்கள் அதிகமாகவும் அடர்த்தியாகவும் இருக்கும் இடத்தில், எதிர்ப்பை எதிர்பார்க்கலாம்.
- ஆனால் தோற்கடிக்கப்பட்டவுடன், காலனியவாதிகள் இயற்கை வளங்களைச் சுரண்டுவதற்காகப் பூர்விக மக்களைக் கட்டாயப்படுத்தலாம்.
- மறுபுறம், பூர்விக மக்கள்தொகை குறைவாக உள்ள இடங்கள் குடியேற்றக்காரர் எதிர்ப்பையும், குறைந்த உழைப்பையும் வழங்கியதா, அதிகமான ஐரோப்பியக் குடியேற்றக்காரர்கள் குறைந்த மக்கள்தொகை கொண்ட இடங்களுக்கே சென்றனர்.
- காலனிகளில் உருவாக்கப்பட்ட அரசியல், பொருளாதார நிறுவனங்களின் வகையைப் பாதித்த முக்கியமான காரணிகளில் இதுவும் ஒன்றாகும். அதிகப் பூர்விக மக்கள்தொகை கொண்ட இடங்களில், காலனிய வாதிகள் வளம்குவிப்புக்குப் பாதை வகுக்கும் அரசியல் சமூக நிறுவனங்களை நிறுவினர்.

- மேலும், மனம் குவிப்புக்குப் பாதை வகுக்கும் அவர்களுடைய செயல்பாடுகளுக்குப் பயனளிக்க, அப்போது இருந்த சமூகப் படிநிலைகளையும் பயன்படுத்தினர்.
- இதற்கு நேர்மாறாக, பூர்விக மக்கள்தொகை குறைவாக உள்ள காலனிகளில் (காலனியாதிகள் குடியேறிய காலனிகள் – settler colonies) தங்கள் சொந்தப் பொருளாதாரச் சுதந்திரத்தை வாக்குவிக்கும், குடியேற்றத்தை மேம்படுத்த உதவும்.
- குடியேற்றத்தை மேம்படுத்த உதவும் உள்ளடக்கிய பொருளாதார நிறுவனங்களை நிறுவினர். பிரிட்டிஷ் காலனிகளாக இருந்த ஆஸ்திரேலியா, நியூசிலாந்தில் நிறுவப்பட்ட நிறுவனங்களின் வகைக்கும். இந்தியாவில் நிறுவப்பட்ட நிறுவனங்களின் வகைக்கும் உள்ள வித்தியாசம் ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம்.

**வளத்தின் வேறுபாடுகள்**

- காலனிய நிறுவனங்களில் உள்ள இந்த ஆரம்பகால வேறுபாடுகளே இன்று நாம் காணும் வளத்தின் பரந்த வேறுபாடுகளுக்கு முக்கியமான காரணம் என்பதுதான் அசெமோக்லு–ஜான்சன்–ராபின்சனின் அடிப்படைப் பங்களிப்பு.
- காலனியவாதிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட வளம்குவிப்புக்குப் பாதை வகுக்கும் நிறுவனங்களின் காரணமாகக் கடந்த காலத்தில் மிகவும் வளமான, அடர்த்தியான மக்கள்தொகை கொண்ட காலனிகள் தற்போதைய ஏழை நாடுகளாகும்.
- அதேபோன்று, குடியேற்றவாசிகள் வாழ்ந்த குறைந்த மக்கள்தொகை கொண்ட காலனிகளில் அவர்கள் அறிமுகப்படுத்திய முற்போக்கான நிறுவனங்களின் காரணமாகத் தற்போது அவை பணக்கார நாடுகளாக உள்ளன.
- மற்றொரு முக்கியமான காரணி–குடியேறிய சமூகங்களில் ஏற்பட்ட நோய்களின் பரவல் நிறுவன வேறுபாடுகளுக்குப் பங்களித்துள்ளது என்பதைத் தங்கள் ஆராய்ச்சியில் வெளிப்படுத்தியுள்ளனர்.
- கொடிய நோய்களின் பரவலானது அமெரிக்காவின் வடக்கு, தெற்கு பகுதிகளுக்கு இடையே பெரிதும் வேறுபடுகிறது. இறப்புப் புள்ளிவிவரங்கள், பூமத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் ஆப்ரிக்கப் பகுதிகள், ஆப்ரிக்காவின் தெற்குப் பகுதிகளைக் காட்டிலும் தொற்று நோய்களால் அதிக இறப்புகளைக் கொண்டிருப்பதாகக் காட்டுகின்றன.

**விடைதேடும் கேள்விகள்**

- குடியேற்றக்காரர்களால் உருவாக்கப்பட்ட வளம் குவிப்புக்குப் பாதை வகுக்கும் சமூக, அரசியல் நிறுவனங்கள் ஏன் இன்னும் வளர்கின்றன?
- சீர்திருத்தங்களுக்கான சாத்தியக்கூறுகள் இருந்தாலும் வளம்குவிப்புக்குப் பாதை வகுக்கும் நிறுவனங்கள் எவ்வாறு நீண்ட காலமாக நீடிக்கின்றன? அதே நேரத்தில், சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள் மாற்றங்களுக்கு உள்ளாகின்றன.
- உதாரணமாக அவர்களுக்கு வாக்குரிமை வழங்குவதன் மூலம் விரிவாக்கப்பட்டன. இத்தகைய மாற்றங்கள் எப்போது, எப்படி நிகழ்கின்றன என்பன போன்ற கேள்விகளுக்கு அனுபவரீதியாகப் பதில் சொல்வது கடினம். மாறாக, இத்தகைய கேள்விகளுக்கு எதிர் நிலையை உருவாக்கும் திறன் கொண்ட கோட்பாட்டு மாதிரிகள் தேவை.

## நிலைத்த வளர்ச்சி இலக்குகளில் இந்தியக் குழந்தைகள் நிலை

- ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு, 2015 இல் ஐக்கிய நாடுகள் அவையால் வரலாற்றுச் சிறப்புமிக்க நிலைத்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals - SDG) வரையறுக்கப்பட்டன.
- வறுமையையும் பசியையும் ஒழிப்பது, சுகாதாரத்தை மேம்படுத்துவது, கல்வி வளர்ச்சி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு உட்பட இதில் குறிப்பிடப்பட்டுள்ள 17 வழிகாட்டி இலக்குகளை 2030 ஆம் ஆண்டுக்குள் எட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இந்தியா உள்ளிட்ட 200 நாடுகள் இலக்குகளை எட்ட உறுதியேற்றன. ஆனால், தற்போது வெளியாகியுள்ள ஆய்வறிக்கையின்படி, குழந்தைகள் உடல்நலன் தொடர்பான இலக்கை எட்ட இந்தியா தவறக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**குழந்தைகள் நலன்**

- 'பில்–மெலிண்டா கேட்ஸ் அமைப்பு' வெளியிட்டுள்ள 'கோல்கீப்பர்ஸ் 2024' ஆய்வறிக்கையில் வெளியாகியுள்ள தரவுகளின்படி வளர்ச்சிக் குறைபாடு (Stunting) ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதில் இந்தியாவில் சவால்கள் அதிகம் என்பது தெரியவந்துள்ளது.
- உலகை அச்சுறுத்தும் காலநிலை மாற்றத்தால் ஏற்கனவே குழந்தைகளின் உடல்நலனில் அதிகப் பாதிப்புகள் ஏற்படுகிற நேரத்தில், எதிர்காலத்தில் நிலைமை மோசமாகக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

- காலநிலை மாற்றத்தால் குழந்தைகள் – பிறப்பதற்கு முன்பே உடல் சார்ந்த பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றனர். அதிக வெப்பநிலை, தீவிர வானிலை மாற்றங்கள், கனமழைப் பொழிவுகளால் ஏற்படும் மாற்றங்கள் அனைத்தும் உணவுப் பாதுகாப்பின்மை, ஊட்டச்சத்துக் குறைபாடு நோய் வளர்ச்சி ஆகியவற்றுக்குப் பங்களிக்கின்றன.

**இந்தியாவின் நிலை**

- உலக அளவில் ஏற்படும் குழந்தைகள் இறப்புகளில் 50% ஊட்டச்சத்துக் குறைபாட்டால் ஏற்படுபவை.
- இந்தியாவில் மட்டும் 5 வயதுக்கும் குறைவான குழந்தைகளில் 50% -க்கும் அதிகமானோர் ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- வளர்ச்சிக் குறைபாடு, குறிப்பிட்ட உயரத்துக்கேற்ற எடையின்மை (wasting), போதிய எடை இல்லாமை போன்றவை ஊட்டச்சத்துக் குறைபாடுடைய குழந்தைகளை அதிகம் தாக்குகின்றன.
- 2023 இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் 38% ஆக இருந்த குழந்தைகளின் வளர்ச்சிக் குறைபாடு பாதிப்பு, 2030 இல் 35% ஆகக் குறையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.
- இந்திய அளவில் இப்பாதிப்பு கட்டுப்படுத்தப்படும் என்பதுபோலத் தெரிந்தாலும், இது 15%க்கும் குறைவாக இருக்க வேண்டும் என்பதே நிலைத்த வளர்ச்சி இலக்கின் நோக்கம், உத்தரப் பிரதேசம் (46.46%), மகாராஷ்டிரம் (44.59%), மத்தியப் பிரதேசம் (41.61%) ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த குழந்தைகள் வளர்ச்சிக் குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.
- நாட்டில் ஊட்டச்சத்துக் குறைபாடு கட்டுப்பாட்டுத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளபோதும், ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைப் பெருமளவில் கட்டுப்படுத்த முடியவில்லை.
- தேசிய அளவில் இப்பிரச்சினையைச் சமாளிக்க, அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ. 1,23,580 கோடியைச் செலவிட அரசு திட்டமிட்டுள்ளது.
- ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, இதயப் பாதிப்புகள் போன்ற தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் என்பதால், இப்பாதிப்புகளைக் கட்டுக்குள் கொண்டுவர மத்திய, மாநில அரசுகள் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.
- 2030 -இல், நிலைத்த வளர்ச்சி இலக்கை எட்டுவதில் இந்தியா தவறவிடக்கூடும் எனக் கருதப்படும் நிலையில், காசநோய் பாதிப்பைக் கட்டுக்குள் கொண்டுவருவதும் கேள்விக்குறியாக உள்ளது. நிலைத்த வளர்ச்சி இலக்கின்படி, 2030 இல் ஒவ்வொரு ஒரு லட்சம் பேரில் காசநோய் பாதிப்புக்கு உள்ளாகிறவர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை 2023 இல் ஒவ்வொரு 1 லட்சம் பேரில் 216 பேரைத் தாக்கும் காசநோய் பாதிப்பு, 2030 இல் 194 ஆக மட்டுமே குறைய வாய்ப்புள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.
- ஆண்டுதோறும், இந்தியாவில் 26 இலட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்படுகின்றனர்: 3 லட்சம் பேர் இறக்கின்றனர். ஊட்டச்சத்துக் குறைபாடும்,
- காசநோய் பாதிப்பு ஏற்படுவதும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. ஊட்டச்சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவரைக் காசநோய் எளிதாகத் தாக்கக்கூடும், அப்படித் தாக்கினால் அதிலிருந்து மீண்டுவருவதும் எளிதல்ல, இந்தத் தரவுகள் இந்தியாவில் நிலவும் ஊட்டச்சத்துக் குறைபாடு பிரச்சினைக்கான தீர்வைத் தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

**என்ன செய்யலாம்?**

- ஊடச்சத்துக் குறைபாட்டுக்கு வழிவகுக்கும் மூல காரணங்களான வறுமை, பொருளாதாரச் சமத்துவமின்மை, பாலினப் பாகுபாடு, காலநிலை மாற்றம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு திட்டங்களை வகுக்க வேண்டும்.
- இந்தியா மட்டுமல்லாது, உலக அளவில் இப்பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகாண வேண்டும் என "கோல்கீப்பர்ஸ் 2024", ஆய்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத விவசாய முறை, காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிப்புக்குள்ளான பகுதிகளைத் தேர்வுசெய்து கவனம் அளித்தல், நுண் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவு கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.
- குறிப்பாக, பெண் குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்துக்கு அத்தியாவசியமான சத்து நிறைந்த உணவை வழங்குதல், ஆரோக்கியமான சூழலை உருவாக்குதல் போன்றவற்றுக்கான திட்டங்களை வகுத்துக் கவனம் செலுத்தினால், அடுத்த ஆறு ஆண்டுகளில் பெருமளவு பாதிப்புகளைக் குறைக்கலாம்.